# 3.3 நிறைவான விசுவாசம்

## வேத வசனம்:
விசுவாசத்தினாலே எரிகோ பட்டணத்தின் மதில்கள் ஏழுநாள் சுற்றிவரப்பட்டு விழுந்தது. எபி. 11:30

## அறிக்கை:
நான் காண்பதைக் காட்டிலும் தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்கிறேன்.

## சத்தியம்:
கர்த்தர் பெரியவரும் வல்லமையில் மகத்துவமுமானவர். அவருடைய ஞானம் அளவிட முடியாதது. அவரைச் சார்ந்து கொள்கிற வர்கள் சீயோன் பர்வதத்தைப் போல இருக்கி றார்கள். அவர்கள்

## ஆர்வமூட்டும் வினாக்கள்
(ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விகளை விவாதிக்கலாம்)

- *எபி. 11:6 ன்படி எதை விசுவாசிக்க வேண்டும்?*
- *ரோமர் 10:17 ன்படி விசுவாசம் எதிலிருந்து வர வேண்டும்?*
- *விசுவாசத்தை வளர்க்க நாம் என்ன செய்யலாம்?*

## பாடக்குறிப்புகள்

- இஸ்ரவேலர் சந்தித்த பிரச்சனைகள் யாவை?
- ஏழு நாட்கள் அவர்கள் என்ன செய்தனர்?
- எரிகோவில் இருந்த மக்களின் பதில் விளைவு என்ன?
- எரிகோ மதில் கீழே விழுந்தது எப்படி?
- இஸ்ரவேலர் பயன்படுத்திய ஆயுதங்கள் என்ன?
- யோசுவா சார்ந்திருந்தது தன்னுடைய நினைவுகளையா அல்லது தேவனுடைய வழிகளையா?
- நீ சார்ந்து கொள்வது தேவனுடைய வாக்குத்தத்தங்களையா அல்லது நீ காண்கிறவைகளையா?

## வேதப்பகுதி
*யோசுவா 6:1-20*

## விசுவாசம். ஒரு புது வழி
*அநேக மக்கள் தங்கள் கண்களால் பார்க்கக்கூடியவற்றை மட்டுமே நம்புகிறார்கள். ஆனால் நாம் தேவனுடைய சாயலில் படைக்கப்பட்டிருக்கிறபடியால் நம்முடைய சரீர கண்களால் பார்க்க இயலாதவைகளை மனக் கண்களால் பார்க்க முடியும். உதாரணத்திற்குக் காற்றை எடுத்துக் கொள்வோம். நாம் காற்றைக் கண்களால் காண முடியாவிட்டாலும் நாம் அதனை உணர முடிகிறது. மிக உற்று நோக்கினால் அதனால் ஏற்படும் விளைவுகளையும் காண முடிகிறது. அதுபோல உன் இருதயத்தால் தேவனுடைய வழிகளைக் காண முடிகிறதா?*

### செயல்
உன்னுடைய தெரிந்தெடுப்புகள் தேவனுடைய வார்த்தையின் அடிப்படையிலும் செயல்கள் விசுவாசத்தால் தாங்கப்படுவதாகவும் இருக்கட்டும். இந்த வாரம் முழுவதும் உன் விசுவாசம் வளர தேவனிடம் உதவி கேள்.

**சிந்திக்க:** *நீ எதனோடு போராடுகிறாய்?*

________________________________________

________________________________________

## ஜெபம்:
*உன்னுடைய இருதயத்தைத் திறக்கும்படியாகவும் உன் விசுவாசத்தை பெலப்படுத்தும்படியாகவும் தேவனிடம் ஒரு ஜெபத்தை எழுது.*

________________________________________

________________________________________